1979 அக்டோபர் 27]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை குறளகத்தில் உள்ள கைத்தறித் துணி விற்பனை நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் சமீபத்தில் தள்ளுபடி, அதாவது, கழிவு விலையில் விற்பனை செய்யப்பெற்று போர்வைகள், தரைவிரிப்புகள், படுக்கை விரிப்புகள் ஆகியவற்றில் தரமானவற்றை விற்பனைக்கு வைக்காமல் தாங்களே எடுத்துக் கொண்டதாகப் புகார் ஒன்று சொல்லப்படுகிறதே, அதனை அரசு பரிசீலனை செய்து இனியேனும் அத்தகைய முறையில் அங்கு நடைபெறாமல், பொது மக்களும் அவற்றை வாங்கிப் பயன்பெற ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. ஆனால், அப்படிப்பட்ட சிறப்புத் தள்ளுபடிகள் வழங்குகிற நேரத்தில் சரியான வகையில் விளம்பரம் செய்து பொதுமக்களும் அரசு ஊழியர்களும் பயன்படுத்துகிற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட புகார்கள் ஏதேனும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, கைத்தறித் துறையில் தேக்கமாக இருக்கிற போர்வை, துணிகள் போன்றவைகளை விற்க முடியவில்லையென்றால் சிறைச்சாலைகளுக்குப் பாதி விலையில் கொடுத்து அரசு உதவி செய்ய முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையில் கைத்தறித் துணியில் தேக்கம் என்ற பிரச்னையே கிடையாது.

[முற்பகல் 9–50].

நீலகிரி மாவட்ட கிணறுகளின் நீரில் எண்ணெய்ப்பசை.

*வினா எண் 20.அ—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நீலகிரி மாவட்டத்தில் வெட்டும் கிணற்று நீரில் ஓர் விதமான எண்ணெய்ப் பசை இருப்பதை அரசு பரிசீலனை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.